உ

சிவமயம்



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும்
வாழ்விடமாகவும் வரித்துக்கொண்டவரும்
பல்கலை ஆளுநருமான

# அமரர் சபாபதி நாராயணன்

அவர்களின் சிவப்பேறு குறித்த

## நினைவுமலர்

10.02.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சமர்ப்பணம்



எதனைச் செய்தாலும் மன்னித்து
அன்புகாட்டி, செல்லமாகக் கண்டித்து
பிள்ளைகள் வாழ்வே தன் வாழ்வென
மெழுகுதிரியாய் உருகி ஒளி தந்து
குடும்பத்தை ஆலமரமாக்கி
நல்ல தந்தைக் கொரு எடுத்துக்காட்டாய்த்
திகழ்ந்து புகழுடம்பு அடைந்து
எம் அன்புத் தெய்வத்தின்
பொற்பாத கமலங்களில் இந்
நூலைப் பாசத்துடன்
சமர்ப்பிக்கின்றோம்.

*பிள்ளையார் கோவிலடி,*
*வடலியடைப்பு.*

*மனைவி, பிள்ளைகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" - தமிழ்மறை

புவியில்
1943
07
16



துயிலில்
2003
01
11

# அமரர் சபாபதி நாராயணன் அவர்கள்

## திதி நிர்ணயப்பா

வாழ்சித் திரபானு மார்கழியீர் சனி நாள்
மார்கழித் திங்கள் அபரபக்கம் - அட்டமி
திதியேர் புகழ் சபாபதி நாராயணன்
ஈசனடி சேர்ந்தான் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

திருமூலர்

## தேவாரம்

குனிந்த புருவமுங் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்த பொற்
பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த மாநிலத்தே

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா - திருப்புலி யூரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாம்
திருவடிமேல் அலரிட்டுத் தேடிநின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற் சோளலக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்தும் அவனுக்கே பிச்சை யானாள்
அன்னையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றால் அகலிட்டத்தான் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கேட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

எத்தாயார் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாறு சும்மாடாம் எவர் நல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பார்
சித்தாய வேடத்தால் நீடு பொன்னித்
திருவாள்ளக் காவுடய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லல் கண்டம் கொண்டடியேன்
என்செய்கேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடமை எல்லாமும்
குன்றே அணையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையே
இன்றொ ரிடையூ றெனக் குண்டோ
என்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

## திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனைதோர்
படரொளி தருதிரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையுந்
துன்று பொற்குமல் திருச்சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுட்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல் மெழு கொக்கின்றதே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன். பெற்றதார் பெறு
வாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை
என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து
பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகோளும்
இசைந்தவூரும் பெண்டிரு மீளமையும் வளமேவும்
விரிந்த நாடும் குன்றமு நிலையென மகிழாதே
விளங்கு தீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்திலேறுங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குரங்குலாவும் குன்றுறை குறமகள் மணவாளா
திருத்தவேகந் கண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந்தண்டையுமழகிய பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

## திருவாசகம்

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
விளங் கொளியாய்
எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்.
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங் கொள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்கில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேர்க்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்பரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச்சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஆற்றேன் எம்ஐயாஅரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானை சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

குறள் வெண்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபாபதி நாராயணன்
## ஒரு கண்ணோட்டம்

பூலோகத்திலே புண்ணிய பூமிகளில் நம் ஈழத்திரு நாடும் ஒன்று. நாயன்மார்களினால் பாடப்பெற்ற சிவனுறையும் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்னும் சிவத்தலங்களையும் தில்லைநடராஜன் திருநடனம் புரிகின்ற ஈழத்துச் சிதம்பரத்தையும், முருகன் உறைவிடமான கதிர்காமம், செல்வச்சந்திதி போன்ற தலங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது யாவரும் அறிந்ததே. அதுமட்டுமல்ல இராவணன் என்னும் அரக்கனின் சிவவழிபாடும் இறுதியில் சிவபெருமான் திருவடியை அடைந்த பெருமையும் நம் ஈழத்திரு நாட்டிற்கே உரியதாகும்.

இப்புண்ணிய நாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் வலிதென்மேற்கு திசையில் செந்தமிழும், சைவமும், பல வகைச் செல்வமும் சிறப்புற கொண்டு மிளிர்வது வடலியடைப்பு கிராமம் ஆகும். இங்கு பனைகளும் வடலிகளும் நிறைந்து காணப்படுவதால் வடலியடைப்பு என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது. "உழுதுண்டு வாழ்வோரே வாழ்வார்" என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைய நாற்புறமும் வயலால் சூழப்பட்ட ஒரு விவசாயக் கிராமமாகும். இக்கிராம மக்கள் கல்விமான்களாகவும் பிரபல வர்த்தகர்களாகவும் விவசாயிகளாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்க தொன்றாகும். பாடசாலைகளையும் கொண்ட எழில்மிகு கிராமமாகும். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முது மொழிக்கு இலக்கணமாக இக்கிராமம் சுற்றஞ்சூழ பல ஆலயங்களைக் கொண்டு விளங்குகின்றது. விநாயகர் ஆலயம்,புத்தடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் கோயில், ஐயனார் ஆலயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு புகழ்பூத்த இக்கிராமத்தில் வாழ்ந்துவந்த வேளாண் குடித்தோன்றல் சபாபதி பாக்கியம் தம்பதி களின் இல்லறத்தின் பெரும் பேறாய்க் கிடைத்த மக்கள் செல்வங்களுள் அமரர் நாராயணன் 1943.07.16 அன்று வந்துதித்தார். இவரின் உடன் பிறப்புக்களாக சிவ நேசன் (அமரர்), மங்கையற்கரசி, நாகேஸ்வரி, சிவசம்பு(அமரர்) பேரின்பநாயகம், பாலச்சந்திரன், பாக்கியநாதன் ஆகி யோரின் சகோதரனுமாவர்.

தனது ஆரம்பக்கல்வியை 1950 ஆம் ஆண்டு அமெ ரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கற்று வரும் போது 1953 ஆம் ஆண்டு தன் தந்தையை இழந்தார். இள மையோடு, வறுமையும் குடிகொண்டது. பிஞ்சு வயதி லேயே குடும்ப பாரத்தையும் தாயோடு சேர்ந்து பகிர வேண்டியதாயிற்று. உறவினர்களின் உதவியோடு கல்வியை தொடர்ந்து பண்ணாகம் மெய்கண்டானிலும், ஐக்கிய சங்கம் பாடசாலையிலும் கற்றார். 1963 ஆம் ஆண்டு பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் கற்கும் காலத் தில் கல்வியில் மட்டுமன்றி பாடசாலை விளையாட்டுத் துறையிலும் சிறப்புற்று விளங்கினார். க. பொ. த. சா. பரீட்சையில் சிறப்பாக சித்தியும் அடைந்தார். தொடர்ந் தும் தனது உயர்கல்வியை கற்றுக் கொண்டு ஈன்றமுகம் பார்த்தும் உடன் பிறந்தோரினது எதிர்கால உயர்வுக் காகவும் தொழில் தேட முடிவாகி விண்ணப்பங்கள் செய்தார்.

உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்து தொடர்ந்து 1967 ஆம் அண்டு வவுனியா சென்று அங்கே மரக் கூட்டுத்தாபனத்தில் எழுதுநராக கடமையாற்றினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு 1973 ஆம் ஆண்டு கிளிநொச்சி சென்று பத்திரிகை நிருபராக கடமையாற்றினார். ஐந்து வருடங்களுக்கு மேலாக ஈழநாடு, இனமுழக்கம், சுடர் ஆகிய பத்திரிகையின் செய்தி நிருபராக கடமையாற்றினார். "சபா" என்ற புனை பெயரில் கதை, கவிதை, கட்டுரை பத்திரிகையில் பிரசுரித்தார். 1975 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவில் ஆணழகன் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றார். 1976 ஆம் ஆண்டு தனது சிறு வயதிலே தன்னை அரசியலில் ஈடுபடுத்திக் கொண்டார். அமிர்தலிங்கம், திருநாவுக்கரசு காலத்தில் தமிழரசுக் கட்சியில் தானும் ஒரு உறுப்பினராக இணைந்து கொண்டார். பின்பு தந்தை செல்வநாயகம் அவர்கள் கூட்டங்களில் உரையாற்றும் போது அதனை மொழி பெயர்த்து உரத்த குரலில் மக்களுக்கு வெளிப்படுத்துவார். அன்றுதொட்டு இன்று வரை அரசியலில் ஆர்வம் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து கொண்டு அங்கு நடைபெறும் கூட்டங்களிற்கு சென்று அதில் கலந்து கொள்ளுவார். 1978 ஆம் ஆண்டு தொல்புரம் கமநல சேவைகள் திணைக்களத்தில் பயிற் செய்கை உத்தியோகத்தராக கடமையாற்றிக் கொண்டு இருக்கும் காலத்தில் இவர் தன் அன்புத் தாயின் விருப்பப்படி இவ்வூரைச் சேர்ந்த தர்மலிங்கம் சிதம்பரம் தம்பதிகளின் இரண்டாவது புத்திரி பத்மாவதியை திருமணம் செய்து வள்ளுவன் காட்டிய நெறியிலே இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்தார்.

வள்ளுவரும் வாசுகியும் இணைந்ததே போல்
வசிட்டரும் அருந்ததி சேர்ந்ததே போல்
உள்ளுதொறும் இனிக்கின்ற குணங்கள் எல்லாம்
உள்ளதொரு இல்லாளாம் பத்மாவதியை
கள்ளமில்லா மனத்துடனே கடமை செய்தே
காசினியோர் மதிக்கவே வாழும் மங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய மங்கை நல்லாளொடு இல்லறம் சீரோடும் சிறப்போடும் நடந்துவரும் காலத்தில்,

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற"

என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய அருள்மொழி, வசந்தமொழி, கயல்மொழி, காந்திமதி, சித்தார்த்தன் ஆகியோர் பெறுவதற்கரிய செல்வங்களாக இம் மண்ணில் உதித்து பெற்றோரை மகிழவைத்தனர். மழலைகள் மகிழ்வில் திளைத்து இன்பம் பல சுமந்து வாழ்ந்து வரும் வேளையில் 1989 ஆம் ஆண்டு கிராம சேவையாளராக கடமை புரியும் வாய்ப்புக் கிடைத்தது. அதற்கு ஒரு வருட பயிற்சியும் நடைபெற்றது. அதில் சிறப்பாக பயின்று 1990 ஆம் ஆண்டு சில்லாலை என்னும் அயற்கிராமத்தில் கிராமத் தலைவனாக கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது 1991 ஆம் ஆண்டு இளவாலை, முள்ளாணை பகுதிகளில் பதில் கிராம சேவகனாக கடமையாற்றி மக்களின் மனங்களில் இடம் பிடித்துக் கொண்டார்.

"இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் சுரவாது
கைசெய்துண் மாலை யவர்"

இரந்து கேட்கமாட்டார். தம்மிடம் இரந்து கேட்பார்க்கு ஒளியாது வழங்குவார். இவ்வாறு வள்ளுவர் குறளுக்கேற்ப வாழ்ந்து வந்தார். தொடர்ந்து 1992 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த காலப்பகுதியிலும் தனது சேவையை தொடர்ந்தும் செய்து வந்தார். 1993 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகத்தில் கிராம சேவை அலுவலர்களுக்கான பயிற்சி நடைபெற்றது. அதில் சிறப்பாக தேர்ச்சியும் பெற்றார். 1994 ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சுகாதார விழாப் போட்டியில் "அவன் தாறான்" நாடகத்தில் சுகாதார உத்தியோகத்தராக சிறப்பாக நடித்து சான்றிதழ் பெற்றுக் கொண்டார். 2000 ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெளிநாட்டு மாப்பிள்ளை" என்ற திரைப்படத்தில் ஒரு பாத்திரமேற்று நடித்தார். இவ்வாண்டிலேயே மாதகல் தெற்கு கிராமத் திற்கு மாற்றலாகி தனது சேவையை தொடர்ந்தும் நடாத்திக் கொண்டு இருக்கும் போது 2001.07.16 ஆம் திகதி தனது சேவையிலிருந்து இளைப் பாறினார்.

அரசசேவையிலிருந்து இளைப்பாறிய பின்னரும் சமூக சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 2002.04.10 ஆம் திகதி சர்வதேச இந்துமத குருபீடம் சமய, சமூக, கலைப்பணிகளைப் பாராட்டி "சிவநெறிச் செல்வர்" என்னும் சிறப்புப்பட்டம் வழங்கி கௌரவிக்கபட்டார். 2003 ஆம் ஆண்டு சமாதான நீதவானாக பதவியேற்றார். அத்தோடு மீண்டும் கிராம சேவையாளராக கடமையாற்ற நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட போது சந்தோஷத்துடன் கடமையை நிறைவேற்ற ஆவலோடு இருந்த வரை பதவியை பெற்று விட்டாய் இனி உனது ஆசை முடிந்தது வா என காலன் அழைத்து சென்று விட்டான் போலும். நோய் என்று ஒரு காலமும் அறியாத இவர் திடீரென 2003.01.11 அன்று மனைவி, மக்கள் கதறியழ இறையடி சேர்ந்தார்.

பிறந்தவர் இறப்பதும்
இறந்தவர் பிறப்பதும்
இயற்கையின் நியதி
துஞ்சியவர் வாழ்வில்
துயரங்கள் நீக்கி
இன்பமுடன் விண்ணுலகில்
இனிதே நீர் வீற்றிருக்க
இறைவன் பாதம் என்றும்
இறைஞ்சுவோம் நாமே.

மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பல்

## மனைவி புலம்பல்

கைப்பிடித்த நாள் முதலாய்
கலக்கமின்றி வாழவைத்தீர்
தாலி தந்த தங்க விரல் இன்று இல்லை
தாலியொடு சென்றது என் உயிரின்மூச்சு
துன்பமென்னும் கடலில் தத்தளிக்க விட்டு
ஒன்று சொல்லா தெங்கே?
என் தெய்வமே ஏகினையே
இது முறையோ? இது தகுமோ
என்செய்வேன் நான் என் செய்வேன்
தீயிலிலே வீழ்ந்த புழுப் போல்
வேதனையில் துடிக்கின்றேன்
ஐயா இனி உம்மை இங்கு
காண்பது தான் எப்போது.

## என் பாசமிகு அப்பாவே !

அப்பா ! அப்பா என் பாசமிகு அப்பாவே !
எங்கே அப்பா காணவில்லையே என்அப்பாவே!
தேடுகின்றோம் நாம் சேர்ந்து காணவில்லையே
இவ்வுலகில்
கண்காணாத தேசத்தில் காலன் உங்களை
மறைத்து விட்டானோ?
துடியாய் துடிக்கின்றோம் நாம் இங்கு.

பக்குவமாய் பலகதை சொல்லி வளர்த்தெடுத்த
தந்தையே
ஐந்து குழந்தைகளையும் பாசம் என்னும் கயிற்றினால்
பிணைத்தெடுத்து வளர்த்திட்ட எம்இனிய தந்தையே
வளர்த்துவிட்டேன் பக்குவமாய் வாழுங்கள் என்று சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்து விட்டீர்களா? உங்களை
மறக்க முடியுமா அப்பா! மறக்க முடியுமா?
எதை மறப்பது அப்பா! எதை மறப்பது
பார்க்கும் பார்வையை மறக்கவா அப்பா! இல்லை
கூறும் அறிவுரையை மறக்கவா அப்பா! இல்லை
உழைத்த இரு கரங்களை மறக்கவா அப்பா! இல்லை
நடந்த பாத சுவடுகளை மறக்கவா அப்பா!
குடும்பம் என்னும் பல்கலைக்கழகத்தில் தலைவனாக
தலைமை தாங்கி
பொறுமை என்னும் நகை அணிந்து பொறுமையுடன்
சிந்தித்து
அமைதியாக உங்கள் சிந்தனைகளைப் பிறப்பித்து
துல்லியமாக
நிறைவேற்றி வெற்றியாக புன்முறுவல் பூத்து நிற்கும்
எம் உயிர்த் தந்தையே!

செல்லமாய் வளர்த்தெடுத்த என் தந்தையே
இரத்தத்தை உணர்வாக்கி இதயத்தை பிழிந்து
உணர்வுகளை அர்ப்பணித்த எம்மினிய அப்பாவே!
சேவையே கண்ணெனவும் கண்களே கடமையெனவும்
துடிதுடித்து இயங்கிய எங்கள் தந்தையே!
மனைவி என்னும் சொல்லுக்கமைய இருபத்தைந்து வருடங்கள்
அப்பா இருபத்தைந்து வருடங்கள்
கணவனே தெய்வமெனவும் அவனே உலகமெனவும்
சேவை செய்த அந்த உத்தமியை எப்படியப்பா பிரிந்தீர்கள்
எப்படி அவளை விட்டுப் பிரிந்தீர்கள்
இன்று அவள் பூவும் இல்லாமல் பொட்டும் இல்லாமல்
துடியாய் துடிக்கும் எம் அம்மாவை எப்படி அப்பா
ஆறுதல் சொல்வது சொல்லுங்கள்
எம் உயிர் அப்பாவே சொல்லுங்கள்.

*அருள்மொழி, வசந்தமொழி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுயிரிலும் அரியவரே என் அப்பா

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே என் அப்பாவே
அப்பா என்னும் பாசமிகு அப்பாவே
உங்களுக்கு அஞ்சலி எழுத என் நெஞ்சில்
இரத்தக் கண்ணீர் கசிகின்றது.

எதை எழுதவதென்று எனக்குப் புரியவில்லையே
அப்பா
ஆனால் உருக்குலைந்த கோட்டைகள் சரித்திரம்
மறப்பதும் இல்லை அப்பா.

என்னில் வைத்த பாசத்தை எழுதுவா அப்பா! இல்லை
என்னை இணைத்திருக்கும் சோகத்தை எழுதுவா
அப்பா
அப்பா என்று உரிமையாக அழைப்போமே அப்பாவே
இனியாரைப்பா நாம் அப்பா! என்று அழைப்பது
காலத்தால் அழியாத தசாப்தங்கள் – அப்பா
என்றும் நீங்காத நினைவலைகள் – அப்பா.

எம்மை எல்லாம் விட்டுப்பிரிய மனமின்றி பிரிந்தீர்களே
என்றும் என் பாசமிகு அப்பாவே
என்ன நடந்தது அப்பா என்ன நடந்தது
அறிய முடியவில்லை அப்பா அறிய முடியவில்லையே
இன்று
எனக்கு ஆறுதல் கூற என் அப்பா இல்லையே
பாசத்துடன் என்னை செல்லமாக வளர்த்தீர்கள்
உங்கள் அன்பான மகளும் நானே
அப்பா நீங்கள் நோய் என்று படுத்ததை
ஒருகாலமும் கண்டிரேனே அப்பாவே!
நிரந்தரமாக உறங்கி விட்டீர்கள் இவ்வுலகைவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பிரிந்து முப்பத்தொரு நாட்கள் சென்றாலும்
உங்கள்
நினைவலைகள் ஆறாது அப்பா ஆறாது
இனி எப்பிறப்பில் காண்பேன் அப்பா
உங்கள் ஆத்மா விநாயகன் திருவடியில்
இன்புற்றிருக்க எல்லாம் வல்ல இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

*கயல்மொழி*

## மீண்டும் எனது அப்பா வருவாரா

அப்பா எதை எழுதுவது கைகள் பதறுகிறது
கண்கள் ஆறாய் பெருகிறது இதயம் படபடக்கின்றது
தலையோ சுற்றுகின்றது வாயோ புலம்புகின்றது.

அப்பா நீங்கள் ஆடிய ஆட்டம் என்னப்பா
எல்லாம் ஆடிஅடங்கி போய்விட்டதே
ஒரு நொடியில் அப்பா! ஒரு நொடியில்
எங்கள் குருவிக்கூடு உடைந்துவிட்டதப்பா
குருவிகள் திசைமாறி தவிக்கின்றன
நான் படும் வேதனை அறியாயோ அப்பா.

என்ன நடந்தது அப்பா உங்களுக்கு என்ன நடந்தது
அறிய முடியவில்லையே தவியாய் தவிக்கின்றேன்
அப்பா
துன்பக் கடலில் சிக்கிவிட்டேன் நான் சிக்கிவிட்டேன்.
அதிகாலை முதன்முதலில் பார்ப்பது உங்கள் முகம் அப்பா
இப்போது அந்து முகத்தை தேடுகிறேன் காணவில்லை
அப்பா காலை 6.30 மணி என்றால் பத்திரிகையுடன்
வருவீர்கள்
ஆனால் இப்போது 6.30 மணி என்றவுடன் வாசலைப்
பார்க்கிறேன்
அப்பா வருவார் என்று நீங்கள் வராததால் நான்
ஏமாறுகிறேன் அப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்குல் பகல் எல்லாம் என் கண்கள்
தூங்க மறுக்கின்றதே – உங்கள்
முகமல்லோ கண்முன் வருகின்றதே.

மண்மீது பிறந்தோர் – எல்லாம்
விண்புகுவார் என்றாலும்
உன்பிரிவு என்னை வாட்டுதப்பா
என்ன நான் செய்திடுவேன்
இம்மண் மீது பிறந்த நாள்முதல்
உன்முகம் காணாது ஒருநாள் கூட
இருந்ததில்லை– இப்போது உன்
நினைவு வந்தவுடன் ஓ! வென்று
அழ வேண்டும் போல் உள்ளது.

புத்தி பல புகன்று மனம் மகிழ
உடையணி வகைகள் பொலியத்தந்து
சிந்தையை திருத்தி நல்ல சொல்,
செயலால், அரும்பண்பால் செழிக்கவைத்த
அப்பாவே – எங்கு சென்றீர்
கற்றோர் அவையில் முன்னினறு
மற்றோர் குற்றம் கூறாத வகையில்
வாழ்ந்த என்னுயிர் தந்தையே

நீங்கள் ஒரு பல்கலைக்கழகம்
உங்களை கற்றுமுடிப்பதே
முழுமையான பல்துறை கல்வி.

அப்பா என அழைக்கும் போது உங்கள்
கம்பீரத் தோற்றம் என்னப்பா?
உங்களின் அதிகாரம் என்னப்பா?
உங்கள் கடைக்குட்டி மகளை விட்டு
எப்படிப்பா பிரிய மனம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் என்றால் என்னவென்று தெரியாது
எமை மகிழவைத்தீர் உங்களோடு ஒன்றாக
இருக்க வேண்டும் உங்களோடு சேர்ந்து

உண்ணவேண்டும் உறங்க வேண்டும் போல்
உள்ளதே மீண்டும் வருவீர்களாஅப்பாவே!
நாம்வரும் வாசலை பாாத்திருப்பீர் எமக்குஒரு
துன்பமென்றால் தாங்கமாட்டீரே எம் இன்பப்
பிறப்பழகே ஏனிந்தப் பிரிவினை, அழுகுரலை
கேட்டிலையோ ஆறுவது இல்லையப்பா
அப்பா! உங்களுக்கு ஈடாக பொன்னும்
பொருளும் குவித்தாலும் அது ஈடாகுமா!
இல்லவே இல்லை.

அப்பா! நீங்கள் இல்லாத வாழ்க்கை
வேம்பங்காய் போல் உள்ளதே ஏன் அப்பா
அப்பா! நீங்கள் இறந்து விட்டீர்கள் என்பதை
என்மனம் நம்ப மறுக்கின்றதே.

பிரியமனமின்றி பிரிந்து சென்றீரோ என் அப்பாவே
அரிய அப்பாவின் கனவை நனவாக்க முன்
நீங்கள் சென்றுவிட்ட செய்தி செவியில்

விழுந்ததப்பா நின்றுவிட்டமூச்சு மீண்டும்
சூடேறிக் கண்ணீர் துயர் துடைக்கும்
தாய்ப் பசுவாய் வாரீரோ
உங்கள் கனவை நனவாக்க கருதிடுவேன் வாழ்நாளில்
எங்கள் தெய்வமே அதைக்காண ஒருதடவை வாரீரோ
மாறாத பாசமுடன் மீண்டொருகால் வாரீரோ
உன்பாதையை தொடர்ந்து நின்று
உன் புகழ் காத்திருப்பேன்.

"தந்தையொடு கல்விபோம்
தாயோடு அறுசுவைபோம்"

*இளையமகள்*

*நா. காந்திமதி (காந்தி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அருமை அப்பாவே!

அப்பா என் அருமை அப்பாவே
எங்கு சென்றீர்கள் அப்பா!
அப்பா என அழைக்கும் போது
உங்களின் கம்பீரத்தோற்றம் என்னப்பா!
உங்களின் அதிகாரம் என்னப்பா
உங்களின் கடைக்குட்டியை விட்டு எப்படியப்பா
பிரிந்தீர்கள்
தாங்கமுடியவில்லையே அப்பா ஆறவும் முடிய
வில்லையே அப்பா!
ஆறிலும் சாவு ,நூறிலும் சாவு என
ஆற்ற எமை முயன்றாலும்
முடியாது அப்பா எம்மால் முடியவே முடியாது

என்னையும் அம்மாவையும் ஒரு கணம் சிந்திக்காமல்
மீளாத்துயில் கொண்டதேனோ
நீங்கள் பெற்றமகன் நான் உங்களுக்கு
கடைசிக் கடமை தன்னை கடையிலே
செய்யவந்த பாவியானேன்
அழுகின்றேன் புலம்புகின்றேன்
ஆற்றமுடியவில்லை என் வேதனையை!
தளராத மனத்துடன் நிமிர்ந்து நின்ற உங்களைப் போல்
பாரினில் யாரும் இப்போது இல்லை
இனியும் இவ்வுலகில் பிறப்பார்கள் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகம் ......................

இப்படியான உங்களையும் கவர்ந்து
செல்லவென்று தைத்திங்கள்
பதினொன்றில் வந்தானோ கூற்றுவன்
உம் உயிர் பிரிந்தாலும்
நீர் செய்த சேவை, நேர்மை, உண்மை
ஆகியன இம்மண்ணில் என்றும் சுடர்விட்டு
ஒளிரும் ஆனால், உங்களது குடும்பமோ
உங்களது பிரிவை தாங்காது
நீங்கள் இருந்த சார்மனை
உறங்கும் கட்டில் இனித்தமக்கு
மறுவாழ்வு வருமாவென
ஏங்கிய வண்ணம் உள்ளன
இவ் ஏக்கத்திற்கு ஏற்ற
விடிவுகாலம் இந்த ஜென்மத்தில்
மீண்டும் எமக்குகிடைத்தமா?!

*மகன்*

*சித்தார்த்தன்*

*"வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்"*

*"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."*

*– குறள் வெண்பா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கா நினைவுகளில் நாமும்.........

ஆழிசூழ் ஈழமாம் அழகிய நாடதில்
வழி வழி தமிழினம் வளமுடன் வாழும்
அழகிய நகராம் யாழ் நகர் தன்னில்
சென் நெல், வாழை, செழுங்கனி மா, பலா
வெற்றிலை, புகையிலை விளைந்திடும் நகராம்
பொன்னகர் இதுவெனம் பலரும் போற்றும்
பண்டத்தரிப்பாம் பேரூர் நடுவில்
வடலியடைப்பெனும் சிற்றூர் அதனில்
நற்குடி பிறந்த உத்தமம் பண்பினான்
சபாபதி என்னும் சற்குண சீலனின்
நற்தவப் பயனாய் நானிலம் தன்னில்
இரண்டாம் மைந்தனாக வந்து பிறந்த
நாராயணனாம் சீரிய பண்பினம்
கிராம அலுவலர் பணி செய்தினிலே
கடமையை மதித்தும் புகழுடன் வாழ்ந்தனன்
பணியோய்வு பெற்று தொண்டுகள் புரிந்தனர்
அண்ணன் இவருடன் அறுவர் பிறந்தனர்
அண்ணன் ஒருத்தன் தம்பிகள் நால்வர் தங்கை ஒருத்தி
கூடியே பிறந்து குதுகலம் கொண்டனர்
தங்கையின் துணைவர் செல்வரத்தினமாம்
அன்பன் இவன் மேல் பேரன்பு கொண்டவர்
தங்கை மங்கையற்கரசியும் மைந்தரும்
மாமனைப் போற்றி மதித்து நடந்தனர்.
அன்பு செலுத்தி பாசமாய் இருந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் வாழ்வில் இடரது புகுந்தது.
காலனின் பொல்லாக் கண்ணது பட்டது
ஞான வாழ்வு நடுவினில் முடிந்தது
கற்ற மனம் போல உற்றார் கதறிட
பெற்றம் உகந்த பெருமான் அடிதனில்
இரண்டறக் கலந்து சங்கமம் ஆயினன்.
நாராயணனாம் நல்லவன் மறைந்தனர்
ஊனுடல் மறைந்தது உயர்புகழ் நிலைத்தது
தங்கையின் குடும்பம் தவியாய் தவித்தது
மருகர் இருவரும் மருகியர் இருவரும்
உருகித் தவித்து உளமது சோர்ந்தனர்
நீங்கா நினைவுடன் நித்தமும் வாழும்
தங்கையின் குடும்பம் உறுப்பினர் தமது
கண்ணீர் மலர்கள் காணிக்கையாகும்.

*சகோதரி குடும்பம்,*
*கனகபுரம்,*
*கிளிநொச்சி.*

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

*– குறள் வெண்பா –*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாநகர முதல்வர்

சமாதான நீதவானும், வடலியடைப்பு கிராமத்தின் சமூக சேவையாளருமான அமரர் சபாபதி நாராயணின் மறைவு அவரது வாழ்விட மக்களுக்கும் குறிப்பாக அவர் சார்ந்திருந்த அரசியற் கட்சிக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

கிராம சேவையாளராகப் பதவி வகித்த காரணத் தினால் மக்கள் சேவையில் அதீத அக்கறை கொண்டு நேர் மையாகவும், கண்ணியமாகவும் செயற்பட்டமை ஊராரும் உறவினரும் நாமும் நன்கறிவோம். அவர் அரச சேவை யிலிருந்து இளைப்பாறிய பின்னரும் சமூகசேவையில் முழுமூச்சுடன் ஈடுபட்டமையில் வியப்பேதுமில்லை.

தமிழினத்தின் உரிமைக்காக தந்தை செல்வாவின் தலைமையில் அக்காலத்தில் தமிழரசுக்கட்சி அகிம்சைப் போராட்டங்கள் பலவற்றை நடாத்திய வேளையில் அமரர் நாராயணன் மிகுந்த துணிச்சலுடன் அப் போராட்டங்களில் பங்கேற்றமையை விதந்து பாராட்டலாம்.

தமிழரசுக்கட்சி பலம்பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணியாக, தமிழ்பேசும் மக்களின் ஏகோபித்த கட்சியாக மிளிர்ந்த வேளையில் மாற்றார் வீசிய வலையில் வீழாது தனது கொள்கையில், இலட்சியத்தில் உறுதியாக இருந்து அர்ப்பணிப்புடன் கூடிய தமது பங்களிப்பினை தமிழர் விடு தலைக் கூட்டணிக்கு இறுதிவரை வழங்கியமை இனம் மற்றும் மொழியின் மீது அவருக்கிருந்த பற்றின் வெளிப்பாடாகவே அமைந்தது.

தன்நலம் கருதாது சமூகசேவையிலும், அரசியல் பணிகளிலும் மிகுந்த துணிச்சலுடன் ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கிய அமரர் நாராயணனின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொண்டு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப் போமாக.

யாழ்ப்பாணம் — செ. கந்தையன்,

23.01.2003. — மாநகர முதல்வர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமிர்தலிங்கம் தம்பதிகள், மு.திருநாவுக்கரசு ஆகியோருடன்
அமரர் உரையாடிய காலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'வள்ளுவமும் வாழ்க்கையும்" பேச்சு - சங்க சார்பில் - நிகழ்த்திய போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடலியடைப்பு புதறானை ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான பிரதம குரு அவர்களின் பிரார்த்தனையுரை.

ஓய்வு பெற்ற கிராம சேவையாளர், வடலியடைப்பு திருமிகு சபா. நாராயணன் அவர்கள் அமரராகிவிட்டார் என்ற தகவல், என்னைப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது. அந்தச் செய்தியை என்னால் இன்றுவரை ஜீரணிக்க முடியவில்லை. ஆனால் என் செய்வது? நேற்றிருந்தார் இன்றில்லை.

மரணம் என்பது உடலுக்குத்தான் உயிருக்கில்லை. அது என்றும் சாஸ்வதமானது.

" பாம்பு செட்டையைக் கழற்றுவதைப் போல ஆன்மாவும், பூதவுடலை அடிக்கடி மாற்றிக் கொள்கிறது".

இந்த உண்மையை நாம் உணர்ந்தால் கவலையில்லை. வாழுங் காலத்தில் தன்னால் முடிந்தளவிற்கு சமூக, சமய பணிகளை ஆற்றியவர். திரு. சபா நாராயணன் அவர்கள் அற்புதமான மனிதன். தன் குல தெய்வமான விநாயகரில் தீராத பத்தியுடையவர். நகைச் சுவையுணர்வு நிரம்பப் பெற்றவர். சிறந்த நடிகரும் கூட. "வெளிநாட்டு மாப்பிள்ளை" என்ற திரை நாடகத்தில் அவரது நடிப்பு கலாபூர்வமானதாயும், உணர்வோட்டமானதாயும் இருந்தது.

அவரது சமூக, சமய, கலைப்பணிகளைப் பாராட்டி எமது சர்வதேச இந்துமத குருபீடம் 5வது ஆன்மீகப் பெருவிழாவில் வைத்து "சிவநெறிச்செல்வன்" என்ற பட்டத்தையளித்துக் கௌரவித்தது. அகில இலங்கை சமாதான நீதிவான் கௌரவமும் இறுதி நேரத்தில் கிடைத்தது. அதையெல்லாம் உதறித் தள்ளி விட்டு புதறானை சித்தி விநாயகன் திருப்பாதங்களில் சரணாகதியானார். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களையும், வாழ்க்கையில் வெற்றி நடைபோட மன வலிமையும், இறையருளும் கிடைக்க புதறானை சித்திவிநாயகப் பெருமானையும் பாரத்தனை ஐயனாரையும் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்,

சிவப்பிரம்மஸ்ரீ சிவ நித்தியானந்தக் குருக்கள்
சிவப்பிரம்மஸ்ரீ நித்ய. சிவதாண்டவ குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சளைக்காத சமூகத் தொண்டன்

அமரர் சபா. நாராயணன் அவர்களை முதன் முதலாக கிளிநொச்சியில் ஒரு 18 வயது இளைஞனாகச் சந் தித்தேன். அன்றிலிருந்து அவர் மறையும் வரை என்னு டைய இனிய நண்பனாகவே இருந்து வந்தார். நாங்கள் ஒரு வரை ஒருவர் சந்தித்துக் கொண்டால் எங்களின் பசுமை யான நாட்களை எண்ணியே சந்தோஷமடைவோம். அர சியலில் எங்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும், என்னுடைய தீவிர ஆதரவாளராகவே இருந்தார்.

அந்த உன்னத பண்பாளனை இளைப்பாறியதும் ஒரு சமாதான நீதவானாக ஆக்கி கௌரவிக்க வேண்டும் என்ற அவாவில் இருந்தேன். ஆனால் அது எப்படியோ ஏதோ ஒரு காரணத்தினால் தள்ளிப்போய்க் கொண்டேயிருந்தது. இறுதியாக அவர் இறப்பதற்கு முதல் நாள் தான் அவரின் சமாதான நீதவான் பதவியின் நியமனக் கடிகத்தை அவ ருக்கு அனுப்ப முடிந்தது. அதை அவர் பார்த்துவிட்டு, எனது கைகளில் இருந்து அதைப் பெறமுடியவில்லையே என கண்கலங்கிக் கூறியுள்ளார். அடுத்தநாள் அவரின் மறைவுச் செய்தி என் இதயத்தை தாக்கியது. இருந்தா லும் அவர் இறப்பதற்கு முன்னால் ஒரு சமாதான நீதவா னாக ஆக்கி கௌரவிக்க முடிந்ததே என்று எனக்கு ஒரு சிறு மன ஆறுதலாக இருந்தது.

சபா.நாராயணன் ஒரு சிறந்த சமூகசேவையாளன். இளகிய மனம் உடைய ஒரு துடிப்பான மனிதன். நீதியுட னும், நேர்மையுடனும் செயற்பட்டு தனக்கென வாழாது சமூக சிந்தனையோடு வாழ்ந்த அவரின் இழப்பு நிரப்ப முடியாத வெற்றிடமே. அவர் ஒரு கவிஞன் மட்டுமல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரையும் சிரிக்க வைத்துப் பேசி வந்த சிறந்த பேச்சாளனும் கூட. அவரின் இழப்பை என்னாலேயே தாங்க முடியவில்லையெனின் அன்னாரின் குடும்பத்திற்கு எத்தகைய ஆறுதலை என்னால் கூற முடியும். காலம் தான் அவர்களை தேற்றமுடியும்.

அவர் செய்த அளப்பரிய சேவைகளே அவர் ஆத்ம சாந்திக்கு துணை நிற்கும் என்றாலும் நாமும் அவர் ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப் போமாக.

வீ. ஆனந்தசங்கரி, பா. உ.,
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி.

நான் யார்?

நீ உடம்பன்று மனமன்று. புத்தியன்று சித்தமன்று. நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக்கடவது.

ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபா நாராயணன் குரல்
# ஓய்ந்து விட்டது

துன்பத்திலும் தவறாது மற்றார் மனத்திலும் மகிழ்வை யூட்டும் என்றும் மலரும் புன்னகை மறைந்துவிட்டது. தனக் காக அன்றி பிறருக்காக வாழ்ந்த வாழ்வு அடங்கிவிட்டது. தன் காதல் மனையாள், அன்புள்ளத்துப் பிள்ளைகள், தொண்டு செய்த மக்கள் எல்லாம் தேம்பித் தேம்பி அழுதிட வும் கண்ணீர்விட்டு கதறிடவும் இதயம் பிடித்துவிட்ட சபா நாராயணனை காலன் பறித்து சென்று விட்டான்.

சபா நாராயணன் கொள்கைக்காக குரல் கொடுத்து வந்தவர். தன் வாழ்விலும் ஒரு கொள்கை வகுத்து வாழ்ந் தவர். தமிழின் விடுதலைக்கும், தமிழர் விடுதலைக்கும் தன் வாழ்வினை தந்தவர். தன் இனிய சுபாவத்தினால் மற்ற வரையும் கவர்ந்தவர். தன் இனிய குரலால், விகட மொழிப் பேச்சால் கொள்கைவழி மக்களை ஈர்த்து வாழ்ந்தவர்.


தொழிலில் அரச ஊழியன் ஆனால் அதற்கு மேலாக மக்கள் தொண்டன். மக்கள் மத்தியில் ஒரு அரச ஊழிய னாக மட்டுமல்ல அதற்கு மேலாக மனிதாபிமானத்துடன் மற்றவர்களுக்கும் உதாரணமாக உழைத்தவர். ஒரு நல்ல ஊழியனை, தொண்டனை, மக்கள் தலைவனை இழந்து தவித்து நிற்கும் அன்னார் குடும்பத்துடனும் மக்களுடனும் ஒன்றிணைந்து துன்பத்தில் பங்கு கொள்கிறோம்.

துன்பத்திலும் துயரத்திலும் துவண்டு விடாமல் அவர் பிள்ளைகள் துணிவுடன் கல்வி அறிவும் ஆற்றலும் பெற்று வாழ்க்கையில் வளம்பெற்று வாழ்ந்திடப் பிரார்த்திக்கின் றோம்.

01. 02. 2003 — மாவை. சோ. சேனாதிராசா (M. P)
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராம அலுவலராக கடமையாற்றி ஓய்வு பெறும் போது மாதகல் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கம் வழங்கும் பிரிவு உபசார விழாவில் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஞானச்சுடர்
வெளியீட்டு விழாவில் சிறப்பு பிரதி பெறல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத மனிதன்

எனது நண்பன் சபா நாராயணன் மறைந்த செய்தி கேட்டு மனம் துடித்தேன். ஒரு கிராம சேவகர் என்ற முறை யில் அல்லாது ஒரு நல்ல இருதயம் கொண்ட மற்றவர்களை அன்புடன் நேசிக்கும் ஒரு நல்ல மனிதனாக நான் அவரைக் கண்டேன். கடும் சுகவீனம் உற்றிருந்த போது நண்பர் நாக ராஜாவுடன் சென்று பார்த்தேன். அவர் சிரித்தபடிதான் இருந்தார். அச்சிரிப்பு அவரின் சொத்து. கடந்த தேர்தல் சமயத்தில் காலநேரம் பாராது எங்கள் வெற்றிக்காக அவர் பணியாற்றியதை நாம் எப்பொழுதும் மறக்கமுடியாது.

அவர் ஒரு கொள்கைப் பிடிப்பாளர்
அவர் ஒரு இலச்சியவாதி
அவர் ஒரு மக்கள் தொண்டர்
அவர் ஒரு பரோபகாரி
அவர் ஒரு அன்புள்ளம் கொண்ட நண்பர்.

இப்படி அமரர் சபா நாராயணைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

தனக்கென்று ஒன்றைத் தேடியதுமில்லை, தனக் கென்று ஒன்றை சேமித்து வைக்கவுமில்லை. எல்லாம் அவன் பாத் துக் கொள்ளுவான் என்று சொல்லிக் கொள்ளுவார். உண் மையில் இவ்வளவு நல்ல மனம் படைத்த ஒரு மானுடனை இறைவன் இவ்வளவு சீக்கரம் தன்னில் சேர்த்துக் கொண் டானே என நான் இதயம் நோக கவலைப்படுகிறேன். உண்மையான மக்கள் தொண்டனை நாம் தேடித்தான் காணவேண்டும். மற்றவர்கள் மனம் நோகவைக்காத பண்பு கொண்ட சபா நாராயணன் போல் இனி ஒருவர் எமக்கு கிடைக்க மாட்டார். அந்த அருமையான ஜீவனை இழந்து தவிக்கும் அவரின் மனைவி, பிள்ளைகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். சபா நாராயணனின் ஆத்மா சாந்தியடைய நாம் அவர் களுடன் இணைந்து பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி

இ. ரவிராஜ்,
நாடாளு மன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயல்வீரன் நாராயணன்

நான் அமரர் நாராயணை 1977 ஆம் ஆண்டு தேர்தலின் போது வட்டுக்கோட்டைத் தொகுதியில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர் எனது கணவர் தா. திருநாவுக்கரசு அவர்களின் வெற்றிக்காக உழைத்த உத்தமன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்க செயல்வீரன். தனது இறுதிமூச்சு இருக்கும் வரையும் ஒரே கொள்கையின் கீழ் நின்று தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு உழைத்தவர்.

அவர் நடித்து படமாக்கப்பட்ட வெளிநாட்டு மாப்பிள்ளை குறுந்திரைப்படத்தை கொழும்பில் நான் பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் அவர் தனது மகளின் கலியாணம் குழம்பிய நேரத்தில் புறோக்கரிடம் வாதிட்டு எப்படியும் அந்தக் கலியாணத்தை ஒப்பேற்றி வைக்கும்படி அழுது கூறிய காட்சியும், அவர் வீட்டில் பிள்ளைகளைத் தனியே விட்டுச் சென்ற காட்சியையும் நினைத்துப் பார்க்கும் பொழுது எனது இதயம் ஒரு கணம் நின்று விடும் போல் இருந்தது.

அவர் ஆற்றிய சேவையும், மக்களுக்கு செய்த நன்மைகளும், அவருடைய குடும்பத்தினரை வாழவைக்க வேண்டி அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்லமாவைக் கந்தனை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

திருமதி. கலைமகள் திருநாவுக்கரசு,
சட்டத்தரணி,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்தும் மறையாத நண்பன்

நட்புக்கு ஒரு இலக்கணம் வகுப்பதில் எனது நண்பன் சபா நாராயணன் ஒரு விஷேடமானவர். எந்த நேரமும் தானும் கலகலப்பாக இருந்து மற்றவர்களையும் கலகலப் பாக்குவதில் அவர் நிபுணர்.

அவர் ஒரு அரச ஊழியர் என்பதை விட அவர் ஒரு சமூக சேவகராய், மற்றவர்களின் துயர்துடைப்பதில் முன் னின்று எந்த நிகழ்வாயியிருந்தாலும் அங்கு முன்னுக்கு நின்று தன்னை முழுமையாக ஈடுபடுத்தி எங்கும் வியா பித்து நின்றார். ஒன்று இரண்டா? நான் எதை எழுதுவது என்று தெரியாமல் மனம் தடுமாறுகிறது. எனது இரண்டா வது மகளின் திருமண வீட்டை ஒரு சந்தோஷம் நிறைந்த விழாவாக்கி ஓடி ஓடி எல்லாக் காரியங்களையும் இழுத் துப் போட்டு செய்த நிகழ்வை என்னால் மறக்க முடி யாது. ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன்பு சந்நதி யான் முருகன் கோயில் சந்நிதியான் மண்டபத்தில் நடந்த நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட பொழுது வழமையான கலகலப்பு எதுவுமின்றி அடக்கமாய் நின் றதையும், அன்னதான நிகழ்வில் எனக்குப் பக்கத்தில் இருந்து சாப்பிட்டதையும் நான் நினைக்கும் போது இத யத்தை நோகப்பண்ணுகிறது.

அவர் ஒரு குணாசித்திர நடிகர். "வெளிநாட்டு மாப் பிள்ளை" என்ற தொலைக்காட்சிப் படத்தில், தனது மகளுக்கு திருமணம் தடைப்பட்ட செய்தி கேட்டு தகப் பன் பாத்திரத்தில் நடித்த அவர் சடாரென்று நிலத்தில் படுத்து நடித்த காட்சியை என்னால் மறக்க முடியாது. பழைய நடிகர்கள் ரங்கராஜ், பாலையர் ஆகியோரின் நடிப்புக்கு ஈடாக நடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபா நாராயணனை அமரராகி கட்டிலில் கிடத்தி யிருந்த காட்சி அச்சினிமாக் காட்சியை நினைவுபடுத்தி. அவரின் பிள்ளைகளையும் மனைவியையும் நான் யோசித்துப் பார்த்த பொழுது என் அழுகையை என்னால் கட்டுப் படுத்த முடியவில்லை. எத்துயர் வந்தாலும் மனம் சலிக்காது நிற்பார். மற்றவர்களுக்கு உதவியாய் நின்ற சபா நாராயணன் தன்னைப் பற்றி கவனிக்காமல் விட்டது ஏன்? இன்றுவரை விடை காணவில்லை. அவரின் நல்ல இதய சுபாவம் அவர் இறக்கும் வரை மேலோங்கி நின்றது. அருமையான கணவனையும் அன்பான தந்தையையும் இழந்து நிற்கும் திருமதி நாராயணனுக்கும் அவரது பிள்ளைகளுக்கும் எமது ஆறுதல் வார்த்தைகள். அவர்களின் இழப்பை ஈடுசெய்யா.

எனினும் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்போம். காலம் தான் மனைவியினதும், பிள்ளைகளினதும் துயர்களை போகச் செய்யும். சபா நாராயணன் போல் நல்ல நண்பனை அப்பழுக்கில்லாத அன்பை செலுத்தும் ஒரு மனிதனை நாம் காணப்போவதில்லை. அவரை அறிந்த எல்லோர் மனதிலும் அவர் என்றும் நிறைந்திருப்பார்.

செம்பியன் லேன்,
கொக்குவில்,
25. 01. 2003.

து. வைத்திலிங்கம்,
(ஓய்வு பெற்ற மேலதிக அரச அதிபர்)

தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
அஃதிலார் மேற்கொள் வது.

- குறள் வெண்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகளின் நண்பன்

அமரர் சபாபதி நாராயணன் எல்லோருடனும் அன்பாகவும் நகைச்சுவையாகவும் பழகும் பண்புள்ளவர். எத்தகைய பெரிய விடயத்தையும் மிகவும் இலகுவான தாக சிந்தித்து செயல் வடிவம் கொடுப்பவர். ஏழை மக்களைக் கண்டால் என்ன தேவைக்காக வந்திருக் கின்றீர்கள் என்று கேட்டு செய்து கொடுப்பவர். தான் எதை வைத்திருந்தாலும் அதை மற்றவர்களுக்கு கொடுத்து மகிழ்பவர். அவர் எதையுமே தனது குடும்பத் திற்கென சேர்க்காது மக்களுக்கு சேவை செய்தவர் .

அவர் கிராம உத்தியோகத்தராக மட்டுமன்றி ஒரு அர சியல் வாதியாக, சமூக சேவையாளனாக, சிறந்த நடிக னாக, சிறந்த பேச்சாளராகச் செயற்பட்டவர். எவருடைய துன்பத்திலும் பங்குபற்றி தன்னுடைய ஆதரவை வழங்கி வந்தவர்.

திரு. நாராயணன் அவர்கள் மிகவும் இரக்க குணம் உடையவர். தான் சம்பளம் எடுத்ததும் அதில் கஸ்ரப்பட் டவர்களுக்கு கொடுத்து வந்ததை நான் அவதானித்தேன்.

அமரரின் இழப்பு அவருடைய குடும்பத்திற்கு மட்டு மல்ல அவர் சார்ந்த பிரதேசத்திற்குமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாருடைய குடும்பத்தா ரின் துயரில் பங்கு கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தி யடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

நா. வேதநாயகன்,
மேலதிக அரச அதிபர்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரரேஸ்வரர் பாதம் அடைந்து பெறுக சாந்தி

வலிகாமம் மேற்கில் வடலியடைப்பு பண்டத்தரிப்பில் உயர்நற்குடியில் பிறந்து நன்மகனாய் வளர்ந்து கற்றுத் தேர்ந்து கல்விமானாகி தனது கிராமத்திலும் அயல்கிராம மாகிய மாதகல் கிராமத்திலும் கிராம சேவையாளராகப் பதவி வகித்து மக்களுக்கு அரும் பெரும் சேவையாற்றி சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்து மக்கள் மத்தியில் பெரும் மதிப்பை பெற்று வாழ்ந்த திருவாளர் சபாபதி நாராயணன் அவர்களது எதிர்பாராத திடீர்மறைவு எமக்கு மட்டுமல்ல அவ்வூர் மக்களையும் அயல்கிராம மக்களையும் ஆறாத் துயரத்தில் ஆழ்த்தியது என்றால் அது மிகையாகாது. விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளராக கடமையாற்றும் திருமதி. பத்மாவதியின் அன்புத் துணைவராவார். திருமதி. பத்மாவதி நாராயணனுக்கு திரு.சபாபதி நாராயணன் அவர்கள் இல்லச் சேவையிலும், அவர் வகிக்கும் பதவியிலும் மிக ஒத்தாசை வழங்குவதில் மிக்க ஆர்வம் உள்ளவர். இலவசத் திருமணங்களை மேற் கொள்வதிலும், காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகள் மேற்கொள்வதிலும் பெருந்தொண்டாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் ஒரு சமூக சேவையாளனும் அரசியல் ஆர்வ மும் உள்ளவர். பலருடனும் பழகுவதில் மிகச் சிறந்தவர். இவரது ஆத்மா காலனுடன் போராடிக் கொண்டிருந்த வேளையில் அவருக்கு சமாதான நீதவான் என்ற பதவியும் கிடைத்தது என்பதை பெரியோர்கள் சொல்ல கேள்விப்பட்டேன். அப்பேற்பட்ட பெருந்தகையினது ஆத்மா சாந்தி அடையவும் அவரது குடும்பம் நல்வாழ்வு வாழவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ந. சதாசிவஐயர்,
காணிப் பதிவாளரும்,
மேலதிக மாவட்டப் பதிவாளரும்,
மேலதிக உதவிப் பதிவாளர் நாயகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்ற செம்மல்

காலத்தை வென்று நின்று காவியம் படைத்தீர்
பிரதேசயுலகில் கலங்கரை விளக்கானீர்
கடமை உணர்வில் வானத்து வெண்ணிலாவானீர்
கட்டுப்பாட்டில் குன்றிலிட்ட தீபமானீர்.

பொறுமைக்கு நீர் ஒரு பூமகளானீர்
அன்பின் அரவணைப்பில் அன்னையுமானீர்
ஆழ அறிவின் பொக்கிசமானீர்
அளவிலாத் தூய்மையின் நிலைக்களமானீர்

இறந்த காலத்தை பிறந்ததுடன் மறந்து விடு என்பீர்
நிகழ்காலத்தை நினைத்தே செயல்படுவீர்
எதிர்காலத்தை ஏறெடுத்தும் பார்க்காது
எழிலாய் வாழ்ந்து நின்றீர்.

நவகருத்துக்களை நயமாக நம் இதயத்தில்
நலமாக விதைத்து நளினமாகப் பேசி
நல்லதையே நினைந்து நம் அன்னைக்கு
நாள்தோறும் நற்பணிகள் கிராம ரீதியாக பல புரிந்த
கிராம அலுவலர் நவஜோதி சபா— நாராயணனது
ஆத்மா சாந்தியடைய எல்லையில்லா இதயங்களின்
எரிமலை குழம்பாக எம் இதயஞ்சலியை செலுத்துகிறோம்.

*வலி – தென்மேற்கு.*
*பிரதேச சபை,*
*மானிப்பாய்,*
*27.01.03*

*செல்வராசா ரமேஷ்,*
*சமாதான நீதவான்,*
*உள்ளூராட்சி உதவியாளர்,*
*பிரதேச சபை,*
*மானிப்பாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் நமோ நாராயணாய


## கண்டாமணி ஓய்ந்ததோ;

எமது சகோதர அலுவலர், ஆத்ம நண்பர் திரு சபா. நாராயணன் வெகு விரைவில் எம்மைவிட்டு சென்றது எமக்கு பேரதிர்ச்சியை தருகின்றதே; எந்த இடத்திலும் உமது குரல் கண்டாமணி போல் ஒலிக்குமே. இன்று ஏன் ஓய்ந்ததோ, நாராயணன் பெயரில் அவதரித்து பத்மா வதியை மணம் புரிந்து பல சாதனைகள் புரிந்தாயே, இனி நாம் எப்போ காண்போம் என துடிக்கின்றோமே. சிறி யோர், பெரியோர், வறியோர், செல்வர், கீழ்மட்டம், அதியுயர் மேல் மட்ட பதவிகளில் உள்ள எல்லோரையும் அன்பால், ஆற்றலால் கவர்ந்தாயே. இவை எல்லாம் எம்மை விட்டுப் பிரிவதற்காகவா; அன்று பண்டதரிப்பு பட்டணமே சந்தோஷ ஆரவாரத்துடன் இருந்ததே. இன்று நீங்கள் இல்லாது சோலை இழந்து கிடக்கிறதே; இவை எல்லாம் எமது கனவா என ஏங்குகின்றோம்.

வெளிநாட்டு மாப்பிள்ளை வீடியோ படத்தில் இயற் கையாகவே நடித்து எம்மை மெய்சிலிர்க்க வைத்தாயே. இன்று நாம் அந்தப் படத்தை பார்க்க முடியாது கண் கலங்கி நிற்கிறோமே. எந்தப் பிரச்சனையையும் பெரிது படுத்தாது எமக்கு அறிவுரை கூறினீரே. இனி நாம் யாரி டம் செல்வது. பிரதேச செயலகத்தில் ஒன்றுகூடல் நிகழ் வில் வினாவிடை போட்டி நடத்துவீரே, பரிசிலும் வழங் குவீரே. இனி யார் எமது அறிவு. ஆற்றலை பெருக்குவார். தொடர்ந்து எமது பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராக வருவேன் என கூறினீரே. பிண்பு எங்கு சென் றீர். பத்திரிகைத்துறை. அரசதுறை என்பவற்றில் சேவை ஆற்றினாலும் அரசியல் துறையில் பெரும் பங்கு வகித் தீரே. இன்று எங்கு சென்றீரோ. உமது தீர்க்க தரிசனம் இறைவனின் கொடை என்றே கருதுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராம அலுவலராக கடமையாற்றி ஓய்வு பெறும் போது மாதகல் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கம் வழங்கும் பிரிவு உபசார விழாவில் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஞானச்சுடர் வெளியீட்டு விழாவில் சிறப்பு பிரதி பெறல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த தலையங்கத்தையும் கொடுத்த மறுகணமே எந்த தளம்பலும் இல்லாது, ஆழமான கருத்துக்களுடன் கொட்டும் அறிவுக் களஞ்சியமே ஏன் சென்றாய். நீங்கள் பூமிக்கு வந்த காரியங்கள் செய்து முடிந்ததோ அல்லது இறைவன் உனது சேவையை தேவலோகத்துக்கு உடன் தேவை என எண்ணினானோ, அதனால் தான் தேவலோகம் விடியும் காலம் மார்கழி அதுவும் வைகுண்ட ஏகாதசி நெருங்கும் நாளில் மாயன் எங்களிடம் இருந்து பிரித்து சென்றானோ.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என்ற விதியை யாரால் வெல்ல முடியும் என்ற குறளுக்கமைய அன்னாரின் குடும்பத்தாருக்கு, எமது சண்டிலிப்பாய் பிரதேச செயலக கிராம அலுவலர் சார்பாக ஆறுதல் கூறுகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாராயணன் பாதம் இறைஞ்சுகின்றோம்.

நாராயணா நாம் மறந்தாலும்,
எம் நாவென்றும் மறவாதே.

ஓம் சாந்தி. சாந்தி. சாந்தி

**சண்டிலிப்பாய் பிரதேச செயலாகம்,**
**கிராம அலுவலர்கள்.**

பண்டத்தரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் வளர்ச்சியில் அவர் பணி

சபாபதி நாராயணன் அவர்கள் எங்கள் பாடசாலையில் க.பொ.த.சாதாரண தரம் படித்த ஒரு பழைய மாணவன்.

பாடசாலை நாட்களில் துடியாட்டம் மிக்க மாணவனாக இருந்தபோதிலும் கல்வியில் கண்ணாக இருந்து க. பொ. த. சாராரண தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றவர். பாடசாலையில் பழைய மாணவர். சங்கத்தை ஸ்தாபித்து முன்னின்று உழைத்தவர். இடம்பெயர்ந்து அலைந்து திரிந்த எமது கல்லூரியை மீண்டும் சொந்த இடத்தில் நடாத்துவதற்கு பெரும் பங்காற்றியவர். அவரது வாக்குச் சாதுரியத்தினாலும் செயற்றிறனினாலும் பாடசாலைக்கு பல சேவைகளை புரிந்துள்ளார். பாடசாலையில் அபிவிருத்தி சங்கசெயலாளராக பல வருடங்களாக பணியாற்றினார். அவர் செயலாளராக இருந்த காலத்தில் ஆசிரியர் தினவிழாக்களை மிகச்சிறப்பாக நடத்துவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர். அரச அதிகாரிகளும் தொண்டு நிறுவனங்களும் அவருடைய பேச்சினால் கவரப்பட்டு பாடசாலைக்கு பல உதவிகளைப் புரிந்துள்ளார்கள்.

இன்று நாம் பாடசாலையை ஓரளவு வசதியாக நடத்திக் கொண்டிருப்பதற்கு அவர் ஆற்றிய பணியே முக்கியமானது ஆகும்.

அவரது பிள்ளைகளை எமது கல்லூரியிலேயே இணைத்து தனது ஊருக்கு முன்மாதிரியாக விளங்கியவர். ஊருக்கு அவர் நிறைய சேவையாற்றி வந்தார். ஆனால் அவர் குடும்பத்தை கடவுள் காப்பாற்றுவார் என நினைத்துப் போல தனது குடும்பத்துக்கு எதுவும் செய்யாது சென்று விட்டார். அவர் நினைத்தது போல் எல்லாம் வல்ல ஐயனார் அவரது குடும்பத்தை காப்பாற்ற நாமும் இறைஞ்சுகின்றோம்.

பண்டத்தரிப்பு

அதிபர்,
பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவண்மை மிக்க நண்பன்

அமரர் திரு. சபாபதி நாராயணன் அவர்கள் எனது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான இனிய நண்பர். எம் இருவருக்கும் இடையில் சுமார் முப்பது வருடங்களுக்கு மேலான பிணைப்பு - தொடர்பு இருந்து வந்தது. எனது மனைவியின் நெருங்கிய சொந்தக்காரர்.

வடலியூர் வேளாண் குடும்பத்திலே பிறந்து வட்டர் கூட்டத்தினை தன் பேச்சிலும் மூச்சிலும் கொண்டு திரிந்த செம்மல் தான் சபா நாராயணன். தன் குடிப்பிறப்பையும், கூட்டத்தையும் என்றுமே பெருமையெனக் கொண்டு வாழ்ந்த பேராளன்.

நாராயணன் ஒரு நாவேந்தன். சங்ககால இலக்கியங் களிலிருந்து தற்காலப் புதுக்கவிதை வரை நன்கறிந் திருந்த இலக்கியவாதி. நாங்கள் இருவரும் சந்திக்கும் போதெல் லாம் நாட்டுநடப்புடன், இலக்கிய விமர்சனங் களும் செய்வதுண்டு. தரமான கட்டுரைகள் எழுதிய ஒரு எழுத்தாளன். ஒரு விவேகியும் கூட.

சபா ஒரு சிறந்த அரசியல்வாதி. தந்தை செல்வா வின் திருத்தொண்டன். தமிழரசுக்கட்சியை வளர்த்த மிகச் சிலரில் ஒருவன். இறுதிவரை அரசியல் வாழ்வில் தடம் புரளாமல் தன் கொள்கைக்காக இலட்சியத்துக்காக முன் னின்று உழைத்த கட்சித் தொண்டன்.

நாராயணன் ஒரு சிறந்த பேச்சாளன். பட்டிமண் டபங்களென்ன? அரசியல் மேடைகள் என்ன? அஞ்சலிக் கூட்டங்கள் என்ன? பாராட்டு வைபங்களென்ன? எல்லா வற்றிலும் தன் காற்றடம் பதித்தவன். ஒரு இலட்சியவாதி.

மலை பெயர்ந்து தன் தலைக்கு முன்னே வந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் நிலைபெயராத அஞ்சாநெஞ்சினன். யார் போற்றி னாலென்ன, யார் தூற்றினாலென்ன? தன் உள்ளம் "சரி" யென ஏற்றத்தை எடுத்துரைக்க எவர் வரினும், எச்சந்தர் பத்திலும் அஞ்சாதவன்.

எல்லோரும் எல்லாமும் பெற்று இன்புற்று வாழவேண் டும் என்ற பொது நோக்குக் கொண்டு, கிராம சேவகராக கடமை பார்த்த போதெல்லாம், ஏழை எளியோருக்குத் தன்னால் முடிந்ததைச் செய்தவர். இன்னார் இனியார், ஏழை பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுகள் நாராயணனிடம் இருந்தே இல்லை.

மணமக்களுக்கு வாழ்த்து, மரணித்தவருக்கு அஞ்சலி, வைபவங்களில் தேவார திருவாசப் பாடல், திருக்கோவில் களில் அருளுரை ஆற்றல், பேச்சாளர் வரவில்லை? இதோ "சபா" வைப் பேசவிடுங்கள் என்று கூறுமளவிற்கு எங்கும் எதிலும் தயங்காது பங்கேற்ற நாராயணன் அவர்கள் இன்று எம்மத்தியில்லை.

நாராயணன் என்னை, "மாஸ்டர்" என்றே அழைப்பார். எங்கு கண்டாலும் என்னைப் புன்சிரிப்போடு அழைக்கும் அந்தச் "சிம்மக் குரல்" இன்று காதில் விழவில்லை. கடந்த பல நாட்களாக, அவரது உற்றாராக, உறவினராக, யாவற்றுக்கும் மேலாக நண்பனாக எமை அழைத்துச் சிரிப் பூட்டிச் சிந்திக்க வைத்த பெருமகன் "சபா" எம்மிடமிருந்து பிரிந்து விட்டார். இரவல் தந்தவன் எடுத்துவிட்டான்.

அவரது பிரிவு யாருமே எதிர்பார்க்காத ஒன்று. இவரது பிரிவால் துயருற்று நிற்கும் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அநுதாபங்கள் உரித்தா கட்டும்.

"சொல்லவல்லன், சோர்விலான், அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவன் குறளுக்கு ஏற்பக் குறுகிய காலத்துள், எதற்கும் அஞ்சாதவனாக, எதையும் கேட்போர் மனதில் பதியும் வண்ணம் அழகாகப் பேசும் பேச்சாளனாக, எப்போதும் சுறுசுறுப்பாய்ச் சோர்வில்லாமல் உழைத்த வடலியூர் மண்ணின் புத்திரனாக வாழ்ந்து முடிந்த சபா- நாராயணன் அவர்களே! தங்கள் அன்புக்கும் நட்புக்கும் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறையருள் இறைஞ்சுகின்றேன். "எமக்கும் நீர் சென்ற வழிதான்" என்பதை நினைத்து ஆறுதடைகின்றேன்.

*2003.01.30*


*க. அ. சின்னத்தம்பி,*
*தலைவர்,*
*ஐக்கிய விளையாட்டுக் கழகம்,*
*பண்டத்தரிப்பு.*


மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மட்கட் பேறு.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

சொல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயம் சரிந்த (தா) து

நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, அகன்ற மார்பு, திரண்ட தோள்கள் அனைவரையும் ஆட்கொள் ளும் சிரிப்பு மொத்தத்தில் அஜானுபாகுவான தோற்றம். இதன் சொந்தக்காரர் தான் நாராயணன். சேர் நீங்கள் மறைந்துவிட்டீர்களா? இல்லை இல்லவே இல்லை. வாழ்வுக்கு வரைவிலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் நீங்கள். எவ்வாறு மறைய முடியும் கடமையின் உறை விடமே. செந்தமிழின் பொக்கிஷமே. நீங்கள் என்றும் வாழ்ந்து கொண்டுதான் இருப்பீர்கள்.

"நெருதல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

என்ற வள்ளுவன் வாக்கு பொய்ப்பதில்லை. உங் களை இழந்து தவிக்கும் உங்கள் குடும்பத்தினருக்கு ஆறு தல்கூறி உங்களின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக் கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

"கணேசபவனம்",
சங்கானை மேற்கு,
பண்டத்தரிப்பு,

பி. சர்மா,
ஆசிரியர்,
அருணோதயாக் கல்லூரி.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்ந்து விடும்.

– குறள் வெண்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயிகளின் நலனுக்காக அயராது உழைத்தவர்

இவர் கனகபுரம் முதலாம் பண்ணையில் 70 களில் வாழ்ந்தார். அக்காலத்தில் இவர் கிளிநொச்சி பிர தேச அபிவிருத்திச் சபையின் துணைச் செயலாளராகவும், "ஈழநாடு" பத்திரிகையின் கிளிநொச்சி நிருபராகவும் இருந் தார். இவ்விரு பதவிகளையும் கிளிநொச்சி மக்களின் முன்னேற்றத்திற்காகச் நன்கு பயன்படுத்தினார்.

அக்காலத்தில் கிளிநொச்சி சந்தையில் தரகர்களின் செல்வாக்கு இருந்த காலம். சிறிய ஏழை விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களின் நிறையைக் குறைத்துக் காட்டும் தராசுகளைப் பயன்படுத்தி அவர்களின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதுடன் குறைந்த விலையும் கொடுப் பார்கள். இதை இவர் கடுமையாக எதிர்த்து வெற்றி கண் டார். அத்தோடு இவர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு எடுத்துவர பேரூந்து சேவையையும் ஏற்படுத் தினார். விற்பனைத் திணைக்களம் விளைபொருட் களை கொள்வனவு செய்ய வழி அமைத்தார். விவசாய உள்ளீடு களில் கலப்படம் இல்லாத நிலையை உருவாக்கப் பாடு பட்டார்.

ஒரு முறை இவர் இவரது மைத்துனரின் காணியில் உண்டுபண்ணிய மிளகாய் நாற்றுக்களில் ஒரு தொகையை இவர்களது வீட்டெதிரே உள்ள ஸ்ரீலங்கா காவல்த்துறை யைச் சேர்ந்த காவலாளி வாங்கிவிட்டு பணத்தைக் கொடுக் கவில்லை. இவர் அப்பணத்தைக் கேட்டதற்காக வேறும் சில காவலாளிகளை வாகனத்தில் கூட்டி வந்து அந்தக் குடும்பத்தை சேர்ந்த அத்தனை பேரையும் வெருட்டினார். இவர் வவுனியாவில் உள்ள உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளருக்கு இவ்விடயமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்பாடு செய்து 24மணித்தியாலத்திற்குள் அவரை இங்கிருந்து இடமாற்றம் செய்தார்.

அந்தக்காலத்தில் யாழ்ப்பாணம் சந்தைகளில் சின்ன வெங்காயம், வாழைக்குலை, காய்கறிகளைக் கொள்வனவு செய்ய வியாபாரிகள் நூற்றுக் கணக்கானோர் ஏ - 09 வீதி வழியாக கொழும்பு, கண்டி பகுதிகளுக்கும் எடுத்துச் செல்வர். இவர்களை கிளிநொச்சிக்கும் முறிகண்டிக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியில் வழிமறித்து பணம் பறிப் பர். ஸ்ரீலங்கா காவல்துறை அதிகாரிகள் இவ்விடயத்தை ஈழநாடு பத்திரிகை செய்தியாகவும் ஆசிரியத் தலையங்க மாகவும் வெளிவரச் செய்து காவல்துறையினரின் கெடுபிடி களை அடக்கி யாழ்ப்பாண விவசாயிகளுக்கு உதவியவர்.

இவர் இருக்கும் இடம் கலகலப்பாக இருக்கும். சிறந்த நாட்டுப்பற்றாளன். மொழிப்பற்றுடையவர். இவரு டைய செயற்பாடுகளில் இவை துலங்கும் தமிழரசுக் கட்சி களின் கொள்கைகளில் மிகுந்த பற்றுடையவர். எந்த நிலை யிலும் அவற்றை நிலை நிறுத்தக்கூடிய சிந்தனைச் சிறப்பும் வாய்ச்சாதுரியமும் உடையவர். இவைமட்டு மன்றி விளை யாட்டிலும் சிறந்து விளங்கி கனகபுரம் கிராமத்தில் விளையாட்டை மேம்படுத்த தன்னாலான அத்தனையும் செய்து விளையாட்டில் கனகபுரம் கிராமம் முன்னணியில் திகழச் செய்தார்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக் கும், உறவினர்களும், நண்பர்களும் ஆறுதலடைவார்க ளாக. அன்னாரின் ஆத்மா சாந்தியடையவதாக.

அமைதி ! அமைதி ! அமைதி !

கிளிநொச்சி.

நாசோதிநாதன்,
முன்னாள் அதிபர்,
கிளிநொச்சி மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழகிய அந்த சில வருடங்கள்

நாம் சபா என்று அன்பாக அழைப்போம். அவர் ஓர் அன்பான, பண்பான பழகுவதற்கினியவர். சீர்திருத்தங்கள் நிறைந்த பல கருத்துக்களை உள்ளடக்கிய சிறந்த பேச்சாளர். நாம் தமிழர் என்ற துடிப்பான செயல் வீரரான அவர் எமது உள்ளங்களில் என்றும் நிறைந்திருக்கக் கூடிய செயல்த்திட்டங்களை, கிராம அபிவிருத்திச் சங்கம், பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் என்பவற்றில் நிர்வாகத்தில் இருந்த காலத்தில் செய்துள்ளார். அவரது கனவுகள் நனவாக்கிக் கொண்டிருக்கின்றன.

இவர் கரைச்சி தெற்குப் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினராக இருந்த காலத்தில் சங்கத்தின் அபிவிருத்திக்கென பல திட்டங்களை எழுத்து வடிவில் தீர்மானங்களாகச் சமர்ப்பித்து முன்னெடுத்துச் செயல் வடிவங்களாக்கினார். குறிப்பாக 1975 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில்

* எமது சங்கத்திற்கு ஒரு லொறியைக் கொள்வனவு செய்து சங்கத்திற்கான சாமான்களை அதன் மூலம் ஏற்றி இறக்க ஆவன செய்ய வேண்டுமென ஓர் தீர்மானத்தைக் கொண்டுவந்து அதனை நடைமுறைப்படுத்தினார்.
* அத்துடன் விவசாயிகளின் காணிகளை உழுது கொடுப்பதற்கு ஓர் உழவு இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்யவும்,
* இரண்டு சில்லு உழவு இயந்திரங்களை பெமித் மூலம் கொள்வனவு செய்து கொடுக்க வேண்டும் என்றும்,
* நெல் செய்கைக்கு கடன் வழங்குவது போல மிளகாய்ச் செய்கைக்கு கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பல தீர்மானங்களைக் கொண்டு வந்து அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை களை எடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் சங்கத்தின் அபிவிருத்திற்காக பல திட்டங்களை முன்வைத்தார். படித்த இளைஞர்களுக்கு சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தையும் முன்வைத்து தொடர்ந்து வந்த பொதுச் சபைக் கூட்டங்களிலும் அவற்றை நடைமுறைப் படுத்த ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

1974 ஆம் ஆண்டு கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தி உபதலைவராக தெரிவு செய்யப்பட்டு அச்சுவேலியில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகிகளுக்கான பயிற்சிகளில் கலந்துகொண்டும், அங்கு நடைபெற்ற பயிற்சியின் பின் நடைபெற்ற கருத்தரங்களில் சிறந்த பயிற் சியாளனாக தெரிவு செய்யப்பட்டு அனைவரது பாராட்டை யும் பெற்று சிறந்த பேச்சாளனாகவும், செயல் வீரனாகவும் திகழ்ந்தார்.

கரைச்சி பிரிவு உதவி அரசாங்க அதிபர் எல்லைக்குட் பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களுடைய கருத்தரங்குகளில் பங்கு பற்றி சிறந்த கிராம அபிவிருத்திச் சங்க செயல்பாட்டாளனாகத் திகழ்ந்தார். கனகபுரம் கிராமத்தில் நடைபெற்ற சகல அபிவிருத்தித் திட்டங்களிலும் முன்னின்று உழைத்து ஓர் செயல் வீரனாகத் திகழ்ந்தார். எம்முடன் பழகிய காலங்களில் சகநிகழ்வுகளிலும் தோளோடு தோள் நின்று உழைத்த ஓர் சிறந்த முன்னெ டுப்பாளனை என்றும் நாம் மறவோம்.

என்றும் உமது நல்ல நினைவுகளோடு வாழும் கனகபுரம் கிராம மக்கள்.

"நன்றி மறப்பது நன்றன்று"

**ஆர். பி. இராசநாயகம்**
**முன்நாள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்.**

**கனகபுரம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நான் கண்ட நாராயணன்"

நான் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் கடமை ஆற்றும் பொழுது நாராயணன் கிராம சேவையாளரைச் சந்தித்தேன்.

அதிகாரிகளுடன் கௌரவமாகவும் அன்பாகவும் பழகி தனது அலுவல்களை நிறைவேற்றுவதில் வல்லவர். மக் களுக்காக வாழ்ந்த மகான் என்று கூறின் மிகையானது.

அவர் எப்பொழுதும் மலர்ந்த முகமும். சிவந்த வாயும் சரிந்த தலையசைவும். இதமான பேச்சும். மற்றவர்களுடன் பழகும் போது நளின நடையும் நான் கண்ட நாராய ணனுக்கே என்றும் உரியவை. இவை எவரிடமும் ஒழுங் கமைந்து இனி மேலும் காணப்படா தனி அம்சங்கள்.

கிராமசேவையாளருக்குள் நாராயணன் அம்மா என்று தமாஷாக அழைத்தால் அதில் ஆயிரம் அர்த்தம் இருக்கும். இவர் நடித்த "வெளிநாட்டு மாப்பிள்ளை" குறும் படத்தைப் பார்த்த பொழுது நாராயணன் தகப்பன் பாத் திரத்தில் தோன்றி நடித்தது அவரது நடிப்பாற்றலை மிகத் திறம்பட வெளிப்படுத்தியது. இப்பேறுபட்ட இன்னோரன்ன குணாதிசயங்களைக் கொண்ட நாராயணன் இன்று நம் இடையே இல்லை என்பது மனதை நெருடுகிறது. அவர் செய்த சேவைகள் அவரது குடும்பத்தை என்றென்றும் சிறப்புடன் வாழ வைக்கும் என நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மனை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி' ஓம் சாந்தி' ஓம் சாந்தி!!!

திருமதி. இ. இரட்ணராஜா
உதவிப் பிரதேச செயலர்.

நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின் மனதை விட்டகலார்

எந்த நேரமும் புன்முறுவலுடன் வரவேற்கும் நாரா யணன், சிறந்த பண்பாளர் நகைச்சுவை மன்னன், அண் ணாவி. கவிஞர். பேச்சாளன். எமது செயலகத்தில் நடக்கும் எந்தவிழாக்களிலும் கூட்டங்களிலும் சரி, செயலக்க ஊழி யர்களின். திருமணம் மற்றும் எக்காரியங்களிலும் முன் னின்று நடாத்தும் நாராயணன் இன்று எம்மிடம் இல்லை. காற்றடைத்த பையை காலன் கவர்ந்து விட்டான்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய அவர் மறைந்த செய்தி என்னுல் ஜீரனிக்கமுடியவில்லை.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய. எல்லாம் வல்ல இணுவில் கந்த சுவாமியை வணங்கி, அன்னாரின் குடும் பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்கள் தெரிவித்துக் கொள் கிறேன்.

ஓம் சாந்தி. சாந்தி. சாந்தி.

ச. செல்வராசா.
பதில் உதவிப் பிரதேச செயலர்
வலி தென் மேற்கு.
சண்டிலிப்பாய்.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறருக்கென வாழ்ந்த பெருந்தகை

எல்லோராலும் செல்லமாக சபா என அழைக்கப்பட்ட சபாபதி நாராயணன் என்னுடன் கடந்த 20 வருடகாலமாக அந்நியோன்னியமாக பழகிய நண்பன் ஆவர். 1987 ல் நான் வடலியடைப்பு கிராம சேவையாளராக நியமிக்கப்பட்ட பொழுது எனக்கு பலவழிகளிலும் உதவி புரிந்து நான் எனது கடமையை நல்லவழியில் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்.

காரியாலயத்தில் எல்லோருடனும் கலகலப்பாக பழகி அதிகாரிகளை தன்வசமாக்கி கஷ்டப்பட்ட மக்களின் துன்ப துயரங்களை நீக்கிய பெருந்தகை.

அரசியல் வாழ்வில் பெருந்தலைவர்களுடன் பழகி தமிழ் மக்களின் துயர் துடைக்க பாடுபட்ட செம்மல், பள்ளிப்பருவ முதல் இறக்கும் வரை யாருக்கம் விலை போகாமல் இறுதி வரை கொள்கைப்பற்றுடன் வாழ்ந்த பெருந்தகை.

எல்லோருக்கும் கற்பூரமாக ஒளிவழங்கி தனக்கென வாழாத பெருந்தகை. இவ்வாறாக நற்பண்புகளை தன்னகத்தே கொண்ட சபா.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற குறளுக்கு இலக்கணமாக வானுலகின் தேவர் என்ற சபையில் இருப்பார் என சாந்தியடைவோமாக.

ஓம் சாந்தி!

ஓம் சாந்தி!

ஓம் சாந்தி!.

37, அன்னசத்திர ஒழுங்கை
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

நண்பன்,
தி. நித்தியானந்தன்,
கிராம அலுவலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மனித நேயம் மிக்கவர்"

அமரர் சபா நாராயணன் அவர்கள் சிறு இளமைப் பராயம் தொட்டு மிக நெருங்கிய நண்பர். இவருடைய தந்தையார் நோய்வாய்ப்பட்டு ஆறாவது வயதிலேயே இறந்துவிட்டார். வறுமை வாட்டியது. அம்மாவின் அரவணைப்பில் அமரர் முத்துவேலு பாலசுப்பிரமணியம் (மைத்துனர்) அவர்களின் மேற்பார்வையிலும் வழிகாட்டலிலும் தனது கல்வியை யா/ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று வந்தார். அன்று பாடசாலையில் ஆரம்பித்த நட்பு சமுதாயமட்டம் வரையில் வளர்ந்து உயர்ந்தது. எமது கிராமத்தில் நடைபெறும் எந்த நிகழ்வாக இருந்தாலும் நாம் பங்குபற்ற தவறுவதில்லை. குறிப்பாக பாடசாலை விளையாட்டுப் போட்டி "சங்கிலியன்" கழக உதைபந்தாட்ட போட்டி தி. வ. அரியரத்தினம் நாடகங்கள் முதலியவற்றில் பங்குகொண்டு தனது நாடகத்துறையில் தன்னை வளர்த்துக் கொண்டார். ஐயனார் ஆலய குளிர்த்தி திருவிழா என்றால் இவர் நாமம் அங்கே ஒலிக்கும். குறிப்பாக எமது இளமை காலத்தில் வடலியடைப்பு சி. பு. சங்கம் பல வழிகளில் எமது பொருளாதார மேம்பாட்டுக்கு உறுதுணையாக இருந்தது. அந்த நிதியைக் கொண்டு எமது பொது செயல்பாடுகள் நடை பெற்றது. இளைஞர்களாக சேர்ந்து அருவி வெட்டுவோம். அதில் கிடைக்கும் ஒருபகுதி "சங்கிலியன்" கழகத்திற்கு அன்பளிப்பு செய்வோம். இரா.தணிகாசலம் (முன்னாள் யா. மாநகர ஆணையாளர்) அவர்கள் எமது அரசடி சனசமூக நிலைய தலைவராக இருந்த காலத்தில் சுகாதார வாரம், கயரோக விழா என்பவற்றில் பிரச்சார ஊர்தியின் பவனியில் யாழ் மாவட்டத்தில் 1 ஆம் இடத்தைப்பெற்று எமது கிராமத்திற்கு பெருமை தேடித்தந்தார்.

எமது கிராமத்தின் நாம் முன்நின்று அனைத்து நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு சிறப்பித்த பெருமை அவரைச்சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக நல்லவர், பழகுவதற்கு இனியவர், எதையும் வெளிப்படையாக பேசும் சுபாவம் உடையவர், தம்மை நாடி வருபவர்களுக்கு சளைக்காது உதவி செய்பவர். "மனிதனாக பிறந்தவனுக்கு எவ்வளவோ பாக்கியங்கள் உண்டு. எல்லாப் பாக்கியங்களுக்கும் மேலான பாக்கியம் பிறருக்குச் சேவை செய்வதே". அந்த வகையில் எமது கிராமத்தில் பிறந்து வளர்ந்து பொதுச் சேவையில் நாட்டம் கொண்ட அமரத்துவம் அடைந்த நம் முன்னோர்களின் கீழ் பணிவான நண்பனாக அமரர் சபா நாராயணன் திகழ்ந்தார். அவர்களின் அரசியல் வழிகாட்டலும், தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் வரிசையில் இடம் பிடித்தார். தனது கொள்கையில் மன உறுதியுடன் தனது இறுதிமூச்சு வரை உழைத்த உத்தமர்.

நாம் எத்தனை நாள் வாழ்ந்தோம் என்பதல்ல. எப்படி வாழ்ந்தோம் இவ் வாழ்வால் சமுதாயம் என்ன பயனடைந்தது என்பது தான் எமது இலட்சியமாக அமைதல் வேண்டும். காரணம் மனிதன் ஒரு சமூக பிராணி. சமூகத்திற்குரிய விழுமியங்களை அறிந்து செல்லும் பொறுப்பு இவனுக்குண்டு. இத்தகைய இலட்சியத்துடன் வாழ்ந்த அமரர் சபா நாராயணனின் நாமம் மறப்பது இலகுவானது அல்ல. இவரின் ஆத்மா சாந்தியடைய, அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் எல்லோருமாக வடலியடைப்பு புதறானை சித்தி விநாயகரையும், பாரத்தனை ஐயப்பசுவாமிகளையும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி.

க. கந்தசாமி,
பாராத்தனை ஐயனார் ஆலயம்,
வடலியடைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இனிய பண்பாளன்"

எமது அன்புச் சகோதரன் சபா நாராயணன் அவர்கள் கடமை, கண்ணியம் பண்புமிக்கவர். இவரது சேவை வடலியடைப்பு மக்களுக்கே தன்னநலம் கருதாது பிறர் நலம் பேணும் வித்தகராக சேவை செய்பவர்.

எல்லோருக்கும் உதவிபுரிந்து நன்மைகளைப் பெற்றவர். எல்லோராலும் மதிப்பு பெற்றவர். சபா நாராயணன் என்று கூறினால் ஒருதரம் மிகையாது.

இனிய நற்பண்பும்; புனித உடையும்; புனித உள்ளமும்; புனித உணர்வும்; படைத்த நற்பண்பாளன். "என்றும் வேண்டும் இன்ப அன்பு" என்றே கூறுவார்.

இவர் எனது காரியாலயத்து வந்து தரிசனம் செய்த பண்பினை என்னால் மறக்கமுடியவில்லை. எல்லாம் வல்ல வடலியடைப்பு சித்திவிநாயகனுடைய திருவடியையடைந்து ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

*அன்பான சகோதரன்,*
*இ. சரவணபவன்.*
*சமூக சேவாமணி,*
*ஆனைக்கோட்டை..*

"அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல்"

"தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்."

– குறள் வெண்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# என் இனிய நண்பா நாராயணா!

நாற்பது வருடங்களாக இரட்டையர் போல நாமிருவரும் இணை பிரியா நண்பர்களாய் இருந்தோம்.

இன்று திடீரெனப் பிரிந்து சென்றாயோ! என்றும் பிரியாப் பிரிவு இன்று இறுதிப் பிரிவானதோ.

உனது நீறு துலங்கும் நெற்றியும் வெள்ளை வெளேரெனக் கண்ணைப் பறிக்கும் புனிதமான உடையும், எவருடனும் சிரித்துக் கதைத்து நகைச் சுவையாய்ப் பழகும் பண்பும், எந்தச் சபையிலும் அழகு தமிழில் கேட்டவர்கள் அதிசயிக்கக் கூடியதாகப் பேசும் ஆற்றலும், அரசியலோ, இலக்கியமோ, சமயமோ, பட்டிமன்றமோ, எதுவானாலும் மேடையில் நின்று கருத்துக் கருவூலங்களை அள்ளி வீசும், உன் சிந்தனை அறிவுத்திறமும் ஓய்ந்தனவோ.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தளபதியான அண்ணர் அமிர்தலிங்கத்தின் அரசியற் பண்ணையில் இருவரும் ஒன்றாக இணைந்து அரசியற் போராட்டங்களில் இணைபிரியாது இறுதி வரை ஈடுபட்டோமே.

எவர்க்கும் அஞ்சாமல் எதையும் ஓய்வு உறக்கமின்றி உடனுக்குடன் செய்து முடிக்கும் உன் ஓர்மமும் உரமும் ஓய்ந்தனவோ.

நாமிருவரும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாய் ஒரே நாளில் உத்தியோகத்தில் சேர்ந்தோம். ஒரு நாளில் கிராம சேவையாளர்கள் ஆனோம். ஒரே நாளில் ஓய்வும் பெற்றோம். இன்று ஒரே நாளில் பிரிந்தனையே.

எத்தனை நாடகங்களில் இருவரும் இணைந்து நடித்தோம். இரசிகர்களை வயிறு குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்தாய். "வெளிநாட்டு மாப்பிள்ளை" எனும் நாடகத்தில் இருவரும் தகப்பன்மாராக நடித்த நடிப்பெங்கே. நீ மல்லாக்காக நிலத்தில் விழுந்த அந்தக் காட்சி என் உள்ளத்தில் அப்படியே படமாகப் பசுமையாகத் தெரிகிறதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாடக ஒலி, ஒளி நாடாவில் நீ இன்றுமட்டுமல்ல என்றும் உயிருடன் என்னுடன் பேசிக் கொண்டே இருப்பாய். உன்னை என்றும் உயிருடன் பார்த்துக் கொண்டே இருப் போம்.

எந்த நிகழ்ச்சிக்குச் சென்றாலும் நாமிருவரும் வெள்ளை உடையுடன் சேர்ந்தே செல்வோமே. எம்மை நண் பர்கள் (இசையமைப்பாளர்கள்) விஸ்வநாதன் இராமமூர்த்தி போல இரட்டையர்களாயிருக்கின்றீர்களே என்று பாராட்டிய சந்தர்ப்பங்கள் எத்தனை.

அத்தனையும் பொய்யாய் இன்று நீ தனித்துச் செல்ல நான் தனித்து நின்று உனக்கு இறுதி அஞ்சலி செய்யும் துன்ப நிலை வந்ததே.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சி தான்
நட்பாம் கிழமை தரும்."

என்ற வள்ளுவப் பெருமானின் சொல்லின்படி உன் உடல் என்னைப் பிரிந்தாலும் உன் உள்ளம் என்னுள்ளத்தில் என்றும் இணைந்தேயிருக்கும். நீ என்றும் என்னுள்ளத்தில் அமரராய் வாழ்வாய்.

*ச. சிவகுமாரன் J.P.*
**இளைப்பாறிய கிராம அலுவலர்,**
**"அமுத சுரபி",**
**கட்டுடை, மானிப்பாய்.**

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

வறியார்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

– குறட் பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிகளில் உங்கள் வதனம்

வடலியூர் மண்ணில் உதித்த
என்றும் புன்னகை தவழும் வதனமுடையா!
இல்லறமே நல்லறமென வாழ்ந்திட்ட
குல விளக்கே..................
அன்பிற்கோர் அமுதூட்டி
பண்பிற்கோர் இருப்பிடமாய் திகழ்ந்த
செல்லப் பெயரோடு எம்மை அழைத்திட்ட
ஒளிச்சுடரே.....................
கோமான் போல வீற்றிருந்து
எம் குலத்தை காத்த
கொழு கொம்பே ..................
கண்ணாடி அணிந்து மகிமையும் மணமும் கமழ
என் முன்னே தோன்றி புகழோடு வாழ்ந்திட்ட
மனத்திரையில் ஒளிப்படமாக வீழ்ந்திட்ட
தென்றலே......................
மருமக்கள் என்றே எம்மை உறவு கொண்டாடி
அருமை சேர் என் மாமா
இவ்வுலகில் வாழும் போது
எருமை சேர் காலன் கையில்
அகப்பட்டீரோ!

*செ. திருவருட்செல்வன் (மருமகன்)*
*கனகபுரம்,*
*கிளிநொச்சி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின் நண்பன்

திரு. சபா நாராயணன் அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு நான் மிகுந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்தேன். அவரோடு நான் பழகிய நாட்கள் என்னால் மறக்கப்பட முடியாதவை. அவருடைய அளவு கடந்த அன்பை சொல்ல வார்த்தைகளால் முடியாது.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் – அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க இவர் என்னுடன் மட்டுமல்லாது எல்லோருடனும் நண்பனாக பழகியவர். தனது பட்டம், பதவி, ஆற்றல், திறமைகளில் பெருமை பாராட்டாது மக்களை மக்களாக மதித்து நடந் தவர். அனைவரது தேவைகளையும் தன் தேவை போல நினைத்துச் செயலாற்றியவர்.

எமது சில்லையூரில் கிராம சேவகராகப் பணியாற்றிய காலத்தில் கிராமத்தின் முன்னேற்றத்திற்காகவும் மக்க ளின் நலனுக்காகவும் அளப்பெரும் பணிகள் ஆற்றியவர். குறிப்பாக எமது கிராம அபிவிருத்திச் சங்க புணருத்தா ரணப் பணிகளில் அயராது ஈடுபட்டு உழைத்து கிராம அபிவிருத்திச் சங்கப் பணிகள் சிறப்பாக நடைபெற அரும்பணியாற்றியவர். மக்களின் தேவையறிந்து தனது கடமை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் பணியாற் றியவர். அனைவருடனும் அன்பாகப் பழகுவதில் வல்ல வர். தனது பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் மக்களுடன் அன்போடு அளவளாவி அவர்களின் இன்ப துன்பங்களில் தாமும் கலந்து கொள்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட ஒரு குணவாளன் திடீரென எம்மை விட்டு மறைவார் என நாம் எவருமே எதிர்பார்க்க வில்லை.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு"

என்பதற்கேற்ப இவர் யாரும் எதிர்பாராத வகையில் காலனிடம் சென்றுவிட்டார். இவரது ஆன்மா இறைவனடி யில் அமைதி பெறவும் இவரை இழந்து தவிக்கும் மனைவி, பிள்ளைகளுக்கு ஆறுதல் கிடைக்கவும் இறை யாசி வேண்டுகின்றேன்.

நன்றி.

*பி. சூசைப்பிள்ளை*
*சில்லாலை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவரும், இளைப்பாறிய பெரும்பாக உத்தியோகத்தரும்.*

*சில்லாலை.*

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

பிறவிப் பெருங்கடன் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்ந்து விடும்.

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புக் கோர் நாராயணன்

பண்டத்தரிப்பு வடலியூரைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ் சென்ற திரு. சபா நாராயணன் அவர்கள் எனது நெருங்கிய சொந்தக்காரர். இனிய நண்பன். சிறு வயது முதலே சேர்ந்து பழகிய பாசமிகு தோழன். நற்குண நலமுடைய பண்பாளன்.

இளமையிலேயே குடும்பச் சுமையைச் சுமந்த இவர், ஒரு விவேகி. பாடசாலை நாட்களில் மிகச் சிறந்த விளை யாட்டு வீரர். ஓட்டப் போட்டிகளில் எப்போதும் முதலிடம் இவருக்கே. சந்தர்ப்பம் கிடைத்திருப்பின் இவர் ஒரு புகழ் பெற்ற சட்டத்தரணியாகவோ, அரசியல்வாதியாகவோ, மிளிர்ந்திருப்பார். சிறந்த சிந்தனையாளர். செயல்வீரர்.

யாரையும் தன் பேச்சு வன்மையால் கவர்ந்து விடும் ஆற்றல் மிக்கவர். சிரிக்கச் சிரிக்கப் பேசியே சிந்திக்க வைக்கும் ஆற்றல் மிக்கவர். அரசியலில் கொள்கை மாறா மல், தந்தை செல்வாவின் வழி நடந்தவர்.

தன் உற்றவர், உறவினர், சகோதரருக்காக பாடுகள் பல பட்டவர். கடமை செய்த கண்ணியவான். ஏழை எளி யவர்கள் மேல் கருணை மிக்கவர். ஆறுதல் கூறி உதவிடும் அன்புள்ளம் கொண்டவர்.

இவரது பிரிவு தாங்க முடியாத ஒன்று. வடலியூரை வளம் பெறச் செய்ய பல நல்ல வேலைத் திட்டங்களுக்கு முன்னின்று உழைத்தவர். நாட்டுப் பற்று மிக்கவர்.

யாவற்றிற்கும் மேலாக எனது இனிய நண்பன். பிரிவு யாவருக்கும் வரும் என்றாலும், இவரது மறைவு தாங்க முடியாதது.

நண்பன் நாராயணன் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிராத்திக்கின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப படும்"

"தனிகை"
அரசடி வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

சி. தனபாலசிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாளில்

## நாராயணனுக்கோர் சீராய்வு.

"நாராயணன்" உனது மனம், நன்றாக யாமறிவோம்.
பேராசான் போன்று பெரு பேச்சு வலு" நீயுடைத்தாய்.
வீராவேசமுடன் பேசும் விந்தைபல கற்றிருந்தாய்.
தேராயுருண்டுழைத்து தேவை நிறைவேற்றிடுவாய்..
நாராய் கிழிந்து பல நற்பணிகள் முறுக்கிடுவாய்.
நேராய் கண்டவுடன் நிழல் சினத்தோ டேசிடுவாய்.
சாராம்சம் புரிந்தவுடன் சங்கதிகள் முடித்திடுவாய்.
வேராயிருந்து பல வீடுகள் விளங்க வைத்தாய்.
பாராய் நீ நடந்த எம்மூர்ப் பல் வீதிகளை
வாராய் ஒரு தடவை வந்து பண்டத்தரிப்பிலுள்ள
"பாராளு மன்றத்திலே" சந்தித்துப் பிரிந்திடுவோம்.
சேராய் சிவனவனின் சிம்மாசனத்தருகே
கோராய் அவனிடமே உனது குலக் கொழுந்துகட்காய்
தாராளமாயிறைக்கும் தாய் மரிசேய் ஜேசுவிடம்
பூராயமாய் வேண்டி பூர்த்தி செய்தோம் கவிதை இஃது
தீராத கவலையுடன் சில்லாலை யூரவர் யாம்.

சம்பங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறந்திடாத நன்றி



மின்னாமல் முழங்காமல் சொல்லாமல்
கொள்ளாமல் திடீரென வீசிய
சூறாவழியினால் எமது குடும்பத்
தலைவர்அமரர் சபாபதி நாராயணன்
அவர்கள் இறைவனடி சேர்ந்த
செய்தி அறிந்து எமது இல்லம் நாடி வந்து
ஈடுசெய்யமுடியாத பேரிழப்பில்
மூழ்கியிருந்த எம்மைத் தேற்றி
ஆறுதல்படுத்தியவர்களுக்கும், மரணச்சடங்கில்
கலந்து கொண்டவர்களுக்கும்,
அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும்,
மலர்வளையம் வைத்து தமது நன்றியை
தெரிவித்தோருக்கும், இரங்கலுரையாற்றிய
பெரியோர்களுக்கும் குறிப்பாக தமிழர்
விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற
உறுப்பினர்களான ஆனந்தசங்கரி, ரவிராஜ்
அவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில்
கலந்து கொண்டவர்களுக்கும்,
வெளிமாவட்டங்களிலிருந்து தொலைபேசி,
தந்தி, கடிதம் மூலம் அனுதாபம்
தெரிவித்தவர்களுக்கும்,
இம்மலருக்கு ஆத்மசாந்தி உரைகளை
வழங்கியவர்களுக்கும், பந்தல்,
கதிரைகள் தந்துதவிய பொன்னையா
மரக்காலை அவர்களுக்கும் 11.02.2003 இன்று
கிரியாவிசேஷங்கள் நன்றாக ஆற்றிய சிவாச்சாரியப்
பெருமக்களுக்கும், இன்றைய ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும்
கலந்து கொண்டவர்களுக்கும்
குறுகிய காலத்தில் மலரை அச்சிட்டு
வெளியிட உதவிய அச்சகத்தினருக்கும்
சகல வழிகளிலும் உதவிபுரிந்த
உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள்
அனைவருக்கும் எமது நல்வாழ்விற்காக
இறைவனை வேண்டுகின்ற அனைவருக்கும்
எமது இதயம் நிறைந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

*பிள்ளையார் கோவிலடி,*
*வடலியடைப்பு,*
11.02.2003

*மனைவி,*
*பிள்ளைகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சபாபதி நாராயணன் அ

### அமரர் சபாபதி பாக்கியம்

**சிவநேசன் (அமரர்)**
\+ கண்மணி
- சத்தியலட்சுமி
- சாந்தலட்சுமி
- விஜலட்சுமி

**நாராயணன்**

**மங்கையற்கரசி [illegible]**
\+ செல்வரத்தினம்
- அன்பரசி
- பாலேந்திரன்
- அன்பழகி
- திருவருட்செல்வன்

**சிவசம்பு (அமரர்)**

**பேரின்பநாயகம் (லண்டன்)**
\+ பகீரதி
- இன்பரதி
- சபேசன்

**பாலச்சந்திரன் (லண்டன்)**
\+ ராஜி
- வாகீசன்

**நாராயணன்**
- அருள்மொழி
- வசந்தமொழி
- கயல்விழி
- காந்திமதி
- சித்தார்த்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்களின் வாழ்க்கை வட்டம்


தர்மலிங்கம் சிதம்பரம்

- பாக்கியநாதன் + செல்வமலர்
  - மேனகா
  - றேனுகா
  - தயாநிதி
  - சசிகாந்தன்
- பத்மநாதன் + நேசமலர்
  - மயூரன்
  - பவித்திரா
  - கவிப்பிரியா
- பத்மாவதி
- கமலாவதி + பத்மராஜா
  - ஜெயந்தன்
  - சஞ்சுதா
  - ஜதுர்சினி
- கலாவதி + நகுலேந்திரன்
  - சிவகுலன்
  - கஜேந்திரன்
  - நிவேத்திரன்
- சோமஸ்கந்தராஜா (சுவிஸ்) + சிவாஜினி
  - சாரங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகின்றாய்
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ அது நாளை
மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.

பாரதி பதிப்பகம். 430,காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். தொ.பே.இல:021 - 2223081

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org